நாள்.27.10.2025
அசல் வழக்கு எண். 60/2021
பி.வா. சா. 2
பெயர். பால சுப்ரமணியன்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

நான் தற்போது கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் ஆனால் முன்னர் முதல் விசாரணை வாக்குமூலம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த வழக்கிற்காக நான் மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அருள்மிகு குலசேகர நங்கையம்மன் கோவிலை சுற்றி பெரிய மதில் சுவர் உள்ளது என்றால் காம்பவுண்ட் சுவர் உள்ளது. மேற்படி சுவர்களை சுற்றி தார் ரோடு உள்ளது என்றால் சரிதான், கோவில் நிர்வாகத்தில் இருந்து போட்டுள்ளோம்.

மேற்படி ரோடு எந்த வருடம் அமைக்கப்பட்டது என்றால் 10 வருடத்திற்கு முன்பு. மேற்படி ரோடு அமைப்பதற்கு எவ்வளவு செலவானது என்றாலும் எந்த கான்ட்ராக்டர் மூலம் போடப்பட்டது என்றாலும் எனக்கு தெரியாது. கோவிலுக்கு கிழக்கு பக்கம் கிணறும், மேல்நிலை நீர்தேக்க தொட்டியும் உள்ளது என்றால் அது தெற்கு பக்கம் உள்ளது. கோவிலின் கிழக்கும் மேற்கும் கேட் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, தெற்கு பக்கம் கேட் உள்ளது. மேற்படி கேட் அடைக்கப்பட்டிருந்தால் பொதுமக்கள் மேற்படி தார் சாலையை பயன்படுத்த முடியாது என்று சொன்னால் சரியல்ல, கேட் திறந்து தான் இருக்கும், மேற்படி சாலையில் கோவிலுக்கு வரும் நபர்கள் மட்டும் தான் பயன்படுத்துவார்கள். மேற்படி தார் சாலையை சுற்றிலும் வயல் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி தார்சாலைக்கு அடுத்து தான் வாதி ஆவுடையப்பன் மற்றும் முருகன் என்பவருக்கும் வயல்கள் உள்ளது என்றால் சரிதான், வடபக்கம் ஆவுடையப்பன் வயலும் கீழ்ப்பக்கம் முருகன் வயலும் உள்ளது. முருகன் அவருடைய வயலிருந்து தார் சாலையை நோக்கி கேட் அமைத்துள்ளார் என்றால் சரிதான், அவருடைய இடத்தில் அமைத்துள்ளார். முருகன் கேட் அமைத்தது சம்மந்தமாக நானும், 1 ,3 பிரதிவாதிகளும் ஆட்சேபனை செய்தோமா என்றால் செய்யவில்லை.

முருகன் கேட் அமைத்தது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேமா என்றால் கொடுக்கவில்லை. கோவிலும் அதை சுற்றியுள்ள தார் சாலையும் சர்கார் புறம்போக்கு நிலத்தில் உள்ளது என்றால் சரியல்ல, கிராம கணக்குகளில் அருள்மிகு குலசேகர நங்கையம்மன் கோவில் பெயரில் உள்ளது. முருகன் கேட் அமைத்ததற்கு பிறகு தான்

நாங்கள் கோவிலுக்கு கேட் போட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் எந்த வருடம் கோவிலுக்கு கேட் போட்டோம் என்றால் 2021 ம் வருடம். நாங்கள் 2021 ம் மேற்படி கேட் அமைக்கவில்லை என்றாலும் அவ்வாறு அமைத்திருந்தால் எங்களது எதிர்வழக்குரையில் தெரிவித்து இருப்போம் என்றாலும் சரியல்ல.

மேற்படி தார் சாலை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உள்ளதா என்றால் சாமி கும்பிட வருவோர் பயன்படுத்தலாம். 04.12.2023 ம் தேதி நாங்கள் வாதியை வயலுக்கு போகவிடாமல் தடுத்ததற்கு வாதி கொடுத்த புகாரின் பேரில் எங்களை காவல்நிலையத்தில் விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி நான் பேசுவேன் என்றால் சரிதான், தற்போது அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார். கோவில் இடம் மற்றும் அதை சுற்றியுள்ள தார் சாலை கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் பத்திரம் மற்றும் பட்டா ஏதாவது நான் பார்த்துள்ளேனா என்றால் 10 (1) அடங்கலில் மேற்படி இடங்கள் கோவிலின் பெயரில் உள்ளது.

தார் சாலை 4 ம் பிரதிவாதியால் அமைக்கப்பட்டது என்றாலும் அதை அடைப்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. வாதியும் மேற்படி கோவிலுக்கு வரிதாரர் என்றால் சரிதான். நாங்கள் மேற்படி கேட் அமைத்துள்ளதால் தார் சாலையையும், கிணறையும் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.